1335
24 MAR 1998
26 MAR 1998




# பாதுகாவலன்
# PATHUKAVALAN

Registered as Catholic Weekly

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 124 இதழ் 4 விலை 5 20-03-1998




# அயலவர்களுக்கு உதவ வேண்டிய கடமையை கிறிஸ்தவ மக்களுக்கு நினைவூட்டுகின்ற காலம் தவக்காலமாகும்

— திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் —

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இவ்வாண்டிற்கான தம்முடைய தவக்கால செய்தியில் அயலவருக்குதவ வேண்டிய கடமையை கிறிஸ்தவர்களுக்கு நினைவூட்டுகின்ற சிறப்பான காலம் தவக்காலம் எனக் குறிப்பிட்டுள்ளார். திருச்சபையானது ஒரு தாயாக, ஒவ்வொருவரும் இறைவனின் பிள்ளைகள் என்ற மனித மாண்புடன் வாழவேண்டும் என்பதனால் தொடர்ந்து எல்லாவகை வறுமையினையும் எதிர்த்துப் போராடியுள்ளது என்று தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எந்த ஒரு வழிபாட்டிலும் வன்னி மக்கள் மறக்கப்படவில்லை

— வன்னி மண்ணில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர்

அண்மையில் வன்னிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருள்திரு J. P. E. செல்வராஜா அடிகள் வன்னி மக்களுடைய பாடுகளையும் துன்பங்களையும் வாழ்க்கையோட்டத்தினையும் பற்றி காவலனுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது வன்னி மக்கள் மத்தியில் தாம் மேற்கண்டவாறு தெரிவித்ததாகக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் எந்தவொரு வழிபாட்டிலும் வன்னி மக்கள் மறக்கப்படவில்லை. இதை யாவரும் நன்கு அறிவர். எமது மண்ணில் அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டும். போர் நிறுத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். தமிழ்மக்களுக்கு ஒரு நிரந்தர அமைதியான வாழ்வு ஏற்பட வேண்டும். இடம் பெயர்ந்தோர் தமது சொந்த இருப்பிடம் சேரவேண்டும். இவைதான் நாம் எப்போதும் இறைவனிடம் வேண்டிக்கொள்ளும் செபமாகும். நாம் எம் சொந்த இடத்திற்கு வந்து விட்டோம். ஓரளவு அமைதி ஏற்பட்டு விட்டது என்று வன்னியில் இருக்கும் தமிழ் மக்களை மறந்துவிடவில்லை. இங்கு நடப்பவற்றை நாம் அறிந்து செபித்துக்கொண்டே இருக்கிறோம் என்று அவர் கூறியதாக தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

அருள்திரு செல்வராஜா அடிகள் தன்னுடைய இந்தத் தரிசிப்பின்போது மடுத்திருப்பதி, நாச்சிக்குடா, முழங்காவில், ஜெயபுரம், வன்னேரிக் குளம், அமைதிபுரம், இராமநாதபுரம், புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, கூழாமுறிப்பு, வவுனிக்குளம், மல்லாவி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

அங்குள்ளவர்களுடைய வாழ்க்கை நிலைபற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போது, மற்றைய துன்பங்களைவிட நோய் அவர்களைப் பெரிதும் வாட்டுகிறது. மலேரியா நெருப்புக்காச்சலால் பீடிக்கப்படாதவர்கள் எவரும் இல்லை என்று கூறலாம். ஒரு முறையல்ல மூன்று, நான்கு முறைகளும் இந்த மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் ஏராளமானவர்கள் வருத்தத்தாலும், வசதியின்மையாலும் பலர் இறந்திருக்கிறார்கள். இராணுவ நடவடிக்கையாலும், செல் வீச்சுக்களாலும் மக்கள் இன்னும் இடம்பெயர்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## துறவுப்பணியில் 40 ஆண்டுகள்

குருத்துவப் பணியில் 4 தசாப்தங்களை களம் பல கண்டு நிறைவு செய்யும் குருமணிகளை வாயாற வாழ்த்துகிறோம். தொடர்க உங்கள் அன்புப்பணி என ஆசி பல கூறுகின்றோம்.

★ அருள்திரு. T. அன்ரன் இராஜநாயகம்
21 — 12 — 1957

★ அருள்திரு. J. P. E. செல்வராஜா
03 — 02 — 1958

★ அருள்திரு. S. E. N. குணசிலன்
03—02—1958

★ அருள்திரு பெனற் கொண்சன்ரைன்
03 — 02 — 1958

## வாழ்த்துகிறோம்

மார்ச் 17, புனித சம்பத்திரிசியார் விழாவிற்கு இம்முறை ஏறக்குறைய 20 குருக்கள் வந்திருந்தனர். விழா சிறப்பாக நடைபெற்றது.

புனித பத்திரிசியார் கல்லூரி திருநாளில் அதிபர், குருக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்க்ள்

## பசாம் போட்டியில் பங்குபெறப்போகிறீரா?

யாழ் மறைக் கோட்டத்தில் பசாம் வாசிப்புப் போட்டியொன்று வழிபாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெற இருக்கிறது. 1-1-73, 31-12-81 காலப் பகுதியில் பிறந்த இரு பாலாருக்கும் நடைபெறும் இப்போட்டியில் 8ஆம் பிரசங்கம் கட்டாயமான பகுதியாக இருக்கும். யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற இருக்கும் மேற்படி போட்டியானது புதிய நேரப்படி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். பங்குபற்றுவோர் தங்கள் பிரதேசத்திற்குரிய இராகத்தில் பாடலாம். போட்டி நடைபெறும் திகதி 28-03-98

8ஆவது பிரசங்கம் தவிர ஏனைய பகுதியில் இருந்து இன்னுமொரு பகுதியை வாசிக்கும்படி போட்டியாளர் கோரப்படுவர்.

# கிளி-முல்லை மறைக்கோட்டத்தில் மனித முன்னேற்ற நிலையத்தின் பணிகள்

யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் C. G. ஜெயக்குமார் அடிகள் கிளி/முல்லை மறைக்கோட்டத்தில் தம் பணிகள் பற்றிக் காவலனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் பின்வரும் திட்டங்கள் நடைமுறையில் இருப்பதாகச் சொன்னார்.

1. வன்னி மாவட்டத்தில் கிட்டத் தட்ட 20 பாடசாலைகளில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு மதியவேளை போஷாக்கு உணவாக இலைக் கஞ்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. சுமார் 5ஆயிரம் குடும்பங்கள் இத்திட்டத்தில் பயனடைகின்றனர்.

2. மேற்படி திட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

3. கல்விக்காக ஏங்கும் எமது சமுதாயத்துக்கு கல்வி கொடுக்கும் நோக்குடன்

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

# யாழ். மரியன்னை பேராலய இளைஞர்களுக்கான ஞானவிரிவாக்கம்

யாழ் மரியன்னை பேராலயத்தைச் சேர்ந்த இளைஞர் குழு ஒன்றுக்கு இம்மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் சமூக விழிப்புணர்வு ஞானவிரிவாக்கம் ஒன்று இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பங்கு பற்றிய இளைஞர்களை பல குழுக்களாகப் பிரித்து, இன்றைய சமூகப் பிரச்சனைகள், சமூகத்தில் இளைஞரின் பணிகள், இப்பணியில் ஏற்படும் சிக்கல்கள் அவற்றுக்கு எவ்வாறு முகம் கொடுத்து சமூகத்திற்கு தம்மாலான சேவையினை வழங்க முடியும் எனவும் ஆராயப்பட்டது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

“ மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் ”

## எம்கருத்து

### பயணப்பொதிகளை இறக்குவது எப்போ?

தொடரும் போரும் முடியாத இடம்பெயர்வும் எமக்கு முற்றுப்புள்ளிகளற்றனவாகி விட்டன.

யாழ் பிரதேசத்தில் எமது வரலாற்று இடம் பெயர்வின் பின்னர் எமது பயணப் பொதிகளை வைத்துவிட்டு சற்று ஆறினாலும் எப்போ தூக்கிக் கொண்டு ஓட வேண்டி வருமோ என்ற ஏக்கம் இன்னும் இருக்கவே செய்கின்றது.

வன்னிப் பகுதியில் இடைவிட்டுத் தொடங்கும் போரும், தொடரும் இடம் பெயர்வுகளும் பயணப்பொதிகளை இறக்கி வைக்க இன்னும் காலம் வரவில்லை என்றே தோன்றுகின்றது. தொடரும் போரும் இடம் பெயர்வும் முடிவற்ற ஒன்றாக வன்னியில் தெரிகின்ற வேளையில் யாழ் மக்கள் தமது கடந்த இடம் பெயர்வு அனுபவங்களை மறந்து விடவில்லை. வன்னி மக்களின் முடிவற்ற சோக நிகழ்வுகளை நினைத்துச் செபிக்கவும் தவறவுமில்லை.

அண்மையில் கிளி–முல்லை மறைக் கோட்டத்திற்கு யாழ் மறை மாவட்டக் குரு முதல்வர் விஜயம் செய்ததை அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றிருப்பார்கள். இதே போல் இன்னும் பல விடயங்கள் நடைபெறவும் வேண்டுமென ஏங்கிக் கொண்டும் இருப்பர்.

வன்னி மண்ணில் குரு முதல்வர் ''எந்த ஒரு வழிபாட்டிலும் யாழ்ப்பாணமக்கள் வன்னி மக்களை மறந்து விடவில்லை'' என்று தெளிவாகக் கூறியது சரியானதே. ஆனால் பணியோடு இணையாத அர்த்தமற்ற வார்த்தைகளாக மட்டும் இருந்து விட்டால் இந்த செபங்கள் வீணானவை. செபத்தை செயலுக்குக் கொண்டு வர வேண்டிய காலம் வந்து விட்டது.

வன்னியின் நிரந்தர வாசிகளையும்,யாழின் இடம் பெயர் வாசிகளையும் இன்னும் அதிகமாக நினைக்க தவக்காலம் பொருத்தமான காலமாகும்.

தவக்கால நிதியை துன்பப்படும் வன்னி மக்களுக்கு துயர் துடைக்கக் கொடுக்கப் படும் அன்பளிப்பாக ஒதுக்கியுள்ளதாக மனித முன்னேற்ற நிலைய இயக்குனர் C.G. ஜெயக்குமார் அடிகள் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

எமது செபமும் செயலும் ஒன்றாக எமது அன்புக் காணிக்கையை அல்லற் படுபவர்களுக்கு அள்ளிக் கொடுக்க நாம் மன நிறைவோடு முன் வருவோமாக.

அவர்களும் பயணப் பொதிகளை வைத்து விட்டு நிரந்தரமாகக் குடி அமரும் காலம் விரைவில் வர இறைவனை வேண்டுவோம்.

எமது அரசியல் வாழ்வின் பயணப் பொதிகளை மட்டுமல்ல, ஆன்மீக வாழ்வின் பயணப் பொதிகளையும் இத்தவக்காலத்தில் இறக்கி வைக்க வேண்டும்.

எமது ஆன்மீகப் பயணத்திற்கு இடராக இருக்கும் பொதிகள் அனைத்தையும் உள்ளத்தில் இருந்து இறக்கி, எமது நீண்ட பயணத்திற்குத் தேவையான பயன் தரும் பொதிகளை ஏற்றி இறைவனை நோக்கிய பயணத்திற்குத் தயாராக வேண்டும்.

## வளன்புரம் திருநாள் மார்ச் 19 இல்

வளன்புரம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயப் பெருவிழா 19-03-1998 அன்று நடைபெறும். காலை 6-45 மணிக்கு திருநாட் திருப்பலியும், சிறாருக்கான முதல் நன்மை வழங்கலும், திருச்சுரூபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும் என போல் நட்சத்திரம் அடிகள் தெரிவித்தார்.

திருநாள் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருள்திரு J. P. E. செல்வராஜா அவர்கள் நிறைவேற்றுவார்.

## கிளி / முல்லை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 50 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிவாரண உதவி மூலம் கற்பிக்க ஆவன செய்யப் பட்டுள்ளது.

4. மருத்துவ வசதியற்ற வன்னிமாவட்டத்தில், மருத்துவ ஊழியர் பற்றாக் குறையும், எமது மக்களுக்கு, சொல்லொண்ணாத் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது.எனவே அவற்றை நிவர்த்தி செய்யும் நோக்குடன் பயிற்றப்பட்ட சில தாதியர்களின் உதவி கொண்டு அக்குறையை எம்மால் முடிந்தவரை சீர்செய்து வருகின்றோம்.

## 'ஆத்மா' புதியமாத சஞ்சிகை

''ஆத்மா'' மனிதத்தின் இருப்பைத் தேடி என்னும் மாத இதழ் ஒன்று புதிதாக வெளிவந்துள்ளது. 111/3, மடம் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்கும் மனிதம் கலந்தாய்வுக் குழுவினரால் வெளியிடப்படும் மேற்படி இதழானது புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் அழகுற அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

## தவக்காலநிதி வன்னி மக்களுக்கு

தவக்கால 5ஆம் ஞாயிறு வாரநிதி வன்னிப் பிரதேச மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் C. G. ஜெயக்குமார் அடிகள் தெரிவித்துள்ளார். பயத்திலும், பதட்டத்திலும், பசியிலும், நோயிலும், இழப்பிலும், இறப்பிலும் துன்பப்படும் இவர்களுக்கு அள்ளி வழங்குவோம்.

(ஆ - ர்)

## அயலவர்களுக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

1998ஆம் ஆண்டுக்குரிய தம்முடைய தவக்கால செய்தியில் வறுமையின் பல்வேறு வகைகளை திருத்தந்தை தெளிவாக விளக்கியுள்ளார். முதலாவதாக பொருளாதார வறுமையைக் குறிக்கும் அவர் தனிநபர் ஒருவர் வறுமை காரணமாக அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய முயலாதபோது அவமதிப்பிற்குள்ளாகின்றார். இரண்டாவதாக ஆன்மீக வறுமையைக் குறிப்பிடும் அவர் இந்த வறுமை பொருத்தமான ஆன்மீக வழி நடத்தல் இல்லாததால் ஏற்படுகின்றது. சொல்லிலும் செயலிலும் நற்செய்தியை அறிவிப்பதே இந்த வறுமைக்கான பதிலாகும், விவிலியமானது வறியவர்களில் கடவுள் பிரசன்னமாக இருப்பதால் அவர்களுக்கு உதவ அழைப்பு விடுக்கிறது. வறியவர்களை வரவேற்போர் கடவுளை உண்மையாக அன்பு செய்வோராவர் என்று தெரிவிக்கிறார்.

அன்புப் பணியாலும் மற்றவர்களிடம் உள்ள நல்லதைப் பார்க்க விரும்பும் திறந்த மனத்தாலும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நல் விருப்பத்தாலும் அயலவர்களுடன் இணைந்து செயல்படும் நல் வழியாலும் ஆன்மீக வறுமையானது இத்தவக் காலத்தில் ஈடுசெய்யப்படலாம் என்று வலியுறுத்தியிருக்கின்றார்.

திருச்சபையிடம் இருந்து அனைவரும் எதிர்பார்ப்பது நம்பிக்கையின் வார்த்தைகளையே. திருச்சபையானது இயேசுக்கிறிஸ்துவில் இருந்து வரும் நம்பிக்கையை வறியவர்களுக்கு முழுமையாக அளிக்கிறது என்று தொடர்ந்து தெரிவித்த திருத்தந்தை அவர்கள் தமது செய்தியின் இறுதிப் பகுதியில் மாபெரும் யூபிலி ஆண்டின் 2ஆம் ஆயத்த காலமாகிய இவ்வாண்டின் இந்த நம்பிக்கையை அளிக்கிறது. குறிப்பாக வறுமையால், தனிமையால் வேதனையில் இருப்போருக்கு உயிர்த்த இயேசுவின் ஒளியால் நம்பிக்கை கிடைக்கும் என்று தெரிவிக்கிறார்.

## இளவாலையில் சேவைநலன் பாராட்டுவிழா

யா./ இளவாலை கன்னியர் மடம் ம. வி. அதிபர் அருட்சகோதரி மேரி பார்பரா அவர்கள் தமது ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு 26–02–98 அன்று வித்தியாலய மண்டபத்தில் சேவை நலன் பாராட்டு விழா இடம் பெற்றது. அருட்சகோதரி மேரி பார்பரா அவர்கள் தமது 35வருட ஆசிரியப் பணியின் இறுதி ஏழு ஆண்டுகளையும் இளவாலைகன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் பணிக்காக அர்ப்பணித்தார்.

குறிப்பாக வரலாறு காணாத இடம் பெயர்வின் போது இளவாலை மக்கள் (1992 இல்) தமது சொந்த கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்த வேளையில் இவரின் பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவ்வேளையில் இவரும் துணை சகோதரிகளும் இடம் பெயராது, எம் இளவாலையின் முது பெரும் பாரம்பரியங்களில் ஒன்றாகத் துலங்கும் கன்னியர் மடம் கல்விச் சாலையையும், அதன் தனித்துவத்தையும் பேணிக் காத்ததுடன் மிகவும் சொற்பமான மக்களுடன் பல பயங்கரச் சூழ்நிலையின் மத்தியிலும் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பையும், கன்னியர் மடத்தின் பொருளாளர் பொறுப்பையும் ஏற்றதுடன் ஆலய சமூகப்பணிகளிலும், நோயாளர், முதியோர் நலன் காப்பதிலும் தன்னலம் கருதாது தம்மை அர்ப்பணித்த பெருமை இவருக்கே சாரும். அத்தகைய பயங்கரச் சூழ்நிலையிலும் அவர் துணிவுடன் நின்று மேற்கொண்ட அளப்பரிய சேவை எம்மால் என்றுமே மறக்கமுடியாததொன்றாகும்.

இவரது சேவை நலன் பாராட்டு விழாவிற்கு திருக்குடும்ப சபையின் மாகாணத் தலைவி அருட்சகோதரி சோபியா பஸ்ரியாம்பிள்ளை அவர்களும், சபையின் ஆலோசகரும், முன்னாள் அதிபருமாகிய அருட்சகோகரி பொன வெஞ்சர் அவர்களும், இளவாலை கன்னியர் மடத்தின் தற்போதைய தலைவி அருட்சகோதரி எமிலியானா அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து விழாவைச் சிறப்பித்தனர். அதைத்தொடர்ந்து பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை புதிய அதிபர் அருட்சகோதரி ஜோசப்பின் சந்தியாப்பிள்ளை அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

S. M. வுளோறன்ஸ்

## நன்றித்துதி

கானாவூர் கலியாண வீட்டில் தேவதாயின் பரிந்து பேசுதலால் தமது காலம் வராத போதும் யேசுநாதர் அதிசயிக்கத்தக்க புதுமை செய்தார். அதே போல் எனக்கும் கிடைக்க வேண்டிய ஒரு அலுவல் தாமதமாகியமையினால் தேவதாயாரிடம் கானாவூரில் செய்தது போல் எனக்கும் கட்டாயம் செய்யும்படி நம்பிக்கையுடன் கேட்டதின் பேரில் உடனே அவ்வலுவல் கிடைத்தமைக்காக நன்றி கூறி பிரசுரிக்கின்றேன். தேவதாயின் பரிந்துரை நிச்சயம் வெற்றி தரும். உமது அடியாள்

M. M. K. சவரிமுத்து.

A/73/98

## தென் இந்திய திருச்சபையின் பொன்விழா

தென் இந்திய திருச்சபையின் பொன் விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதி சென்னை சென் யோர்ஜ் பேராலயத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மேற்படி திருச்சபையானது 1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 உடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்தது.

கடந்த ஆண்டு கொண்டாட இருந்த இதன் பொன்விழாவானது முன்னாள் பேராயர் D. J. அம்பலவாணர் அவர்களின் திடீர் மரணத்தால் பின் போடப்பட்டது.

வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடந்த மேற்படி விழாவில் அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த அருள்திரு நேசக்குமார் கத்தோலிக்க திருச்சபையை சார்ந்த அருள் திரு ஜெயசீலன் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி இராஜரட்டினம் ஆகியோர் உரையாற்றினர்.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி S. ஜெபநேசன் அவர்கள் உரையாற்றும் போது மேல் நாட்டுக் கிறிஸ்தவர்களிடையே நிலவிய பிரிவுணர்வுகள் ஆசியா முழுவதும் பரவிய போதும் இச்சபைகள் ஒன்றிணைக்கப்பட வேண்டுமென பலர் விரும்பினர் என்று தெரிவித்தார்.

தென்இந்திய திருச்சபையில் இன்று 21 ஆதீனங்கள் 2 மில்லியன் அங்கத்தவர்களுடன் உள்ளன. ஆரம்ப கால ஆதினங்களில் யாழ் ஆதினமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசியாவில் ஓர் விடிவெள்ளி

## செபமாலைத் தாசர் சபை வரலாறு 2

(சென்ற இதழ் தொடர்ச்சி) ✱ அருள்திரு அ. ம. ஸ்ரீபன் செ. தா

எனவே நமது வாழ்வில் நாளாந்தம் தூய ஆவியிடம் நம்மை அர்ப்பணித்து அடிக்கடி அவரை அழைத்து துதிப்பாடல்களால் ஆராதித்துப் புகழ்ந்து அவரின் வல்லமையைப் பெற்று இறைவன் இன்று என்னிடம் எத் திட்டத்தை செயல்படுத்த விரும்புகிறார் என்று இறைவனோடு சிறிது நேரம் அன்பாக உரையாடி அன்பின் தூதர்களாக எப்போதும் செயல்படுவோம். ''யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவர்? என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்பேன்'' (இசை. 6 : 8). அனைத்து மக்களும் தூய ஆவியின் வரங்களைப் பெற மன்றாடுவோம்.

தூயஆவியின் செயல்ப்பாடு ஆரம்பமானால் அது எவ்வாறு இருக்கும் என்பதற்கு விவிலியத்தில் நாம் வியக்கும் பல நிகழ்வுகளைக் காண்கிறோம். ஆம், ''இறைவனால் ஆகாதது எதுவுமில்லை'' (லூக். 1 : 37) என்ற கோஷத்தோடு உலகமே வியக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன, இடம்பெறுகின்றன.

இறைமகன் மனுமகன் ஆக வேண்டும் என்பது இறைத் திட்டம். இதைத் தூயஆவியின் வல்லமை ஒன்றே செயலாக்க முடியும். எனவேதான் கபிரியேல் வானதூதரின் யேசு பிறப்பின் தூதுரையைக் கேட்ட கன்னிமரி, ''இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே'' என்றார். வானதூதர் அவரிடம்'' தூயஆவி உம்மீது வரும். உன்னத கடவுவின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலின் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும் (லூக். 1 : 24, 25) என்றார்.

திருத்தூதர் பணிகள் 2ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். பெந்தக்கோஸ்து என்னும் நாளில் மரியாவோடு இணைந்திருந்த அப்போஸ்தலர் தூய ஆவியைப் பெற்றதும் அவர்களின் செயல்ப்பாட்டைக் கண்டு ''வானத்தின் கீழ் உள்ள அனைத்து நாடுகளிலிருந்தும் வந்திருந்த மக்கள் எல்லோரும் மலைத்துப் போயினர். (2 : 7) தூயஆவியின் செயல்பாடுகள் உலகம் உடனேயே புரியமுடியாத உலக சக்திகள் அடக்க முடியாத வல்ல செயல்களாகும்.

திருமறை வரலாற்றில் உலகையே மலைக்க வைக்கும் தூயஆவியின் செயல்ப்பாடுகளில் ஒன்றுதான் 1920 களில் தூய ஆவி திருத்தந்தை பதினோராம் பத்திநாதர், யாழ்ஆயர் J. A. கியோமர், தவத்திரு. B. A. தோமஸ் ஆகியோரில் ஒரே காலத்தில் செயல்ப்பட்டு விண்ணரசின் விளைநிலத்தை இந் நானிலத்தில் தோற்றுவிக்க இன்றியமையா சாதனமாக விளங்கும் செப தவ தியானயோக சபையை ஏற்படுத்தும் திட்டத்தை செயல்ப்படுத்தியது.

1926ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ஆம் தேதி திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் ''திருச்சபை பற்றிய உண்மைகள்'' என்ற சுற்றுமடலை திருமறையின் அனைத்து ஆயர்களுக்கும் அனுப்பியிருந்தார். இந்த சுற்றுமடல்தான் தூய ஆவி இவ் இறைத்திட்டத்தை நிறைவேற்ற ஆன்மாக்களில் செயலாற்றி அதற்கேற்ற வகையில் அவைகளை வழிநடத்துகிறார் என்பதை வெளியாக்குகிறது.

திருத்தந்தையின் சுற்றுமடல் தாங்கி வந்த முக்கிய குறிப்பு தோமஸ் அடிகளாரிடம் தாம் கல்விக் கூடத்திலும், கல்லூரி விடுமுறை நாட்களில் ஓய்வெடுத்து உரையாடும் வேளைகளிலும் கேட்ட அதே உயிரின் வார்த்தைகள்தான் என்பதை ஆயர் அவர்கள் உடனேயே உணர்ந்து கொண்டார்.

காலதாமதம் இல்லாமல் தோமஸ்அடிகளாரைபுனித பத்திரிசியார்கல்லூரியிலிருந்து வரவழைத்து திருத்தந்தையின் சுற்றுமடலை மகிழ்வோடு கொடுத்து மடல் முழுவதையும் குறிப்பாக நான் கோடிட்டுள்ள குறிப்புகளையும் வாசியும் இறைவன் உமது செபத்தையும், தவத்தையும் ஏற்றுக் கொண்டார் என்று கூறினார். பின் நம்யாழ் மறைமாவட்டத்தில்செபதவ வாழ்வை வாழும் தியானயோக சபைகளை ஏற்படுத்தி திருத்தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினால் என்ன? என்று ஆயர் அவர்கள் கேட்டார். ஆனால் தாம் இம் மாபெரும் பணியை நிறைவேற்ற தகுதியற்றவன் என்று தாழ்மையோடு எண்ணி நின்ற வேளையில், நீர்தான் இதைச் செய்யவேண்டும் என்று தூய ஆவியின் வெளிப்படுத்தல் ஆயர்வழி வந்தது. ஆயரின் ஆணை ஆண்டவரின் ஆணை என்று ஏற்று ஓயாத செப தவத்தோடு இம்மாபெரும் பணிக்கு வேண்டிய ஆயத்தங்களை செய்ய தூயஆவியின் துணையை நாடினார்.

இறைத்திட்டம் நிறைவேற அதாவது இயேசு இவ் உலகில் பிறக்க வானதூதர் மூலம் மரியாவை சந்தித்தார் இறைவன். இதேபோன்று கிறிஸ்துவின் ஆன்மீகத் துறையை அபிவிருத்தி செய்ய, இவ்வுலகில் செபமாலைத்தாசர் சபையை நிறுவ இறைவன் ஆயர் கியோமர் மூலம் தவத்திருதந்தை தோமஸ் அடிகளாரைச் சந்தித்தார். நமது மறைமாவட்டத்தில் பரிசுத்த தந்தையின் விருப்பத்தை நிறைவு செய்ய நாம் தேர்ந்தெடுக்கும்குரு வேறுயாருமல்ல நீர்தான் என்றார் ஆயர் அவர்கள். இத்தகைய ஒரு மாபெரும் பணியை நிறைவேற்ற கீழைத்தேச நாடுகளில் நம் மத்தியிலிருந்து ஒருவர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் இவரை அறியாத நம்மவர் உள்ளங்களிலிருந்து இவர் யார்? எப்படிப் பட்டவர்? என்ற கேள்விகள் எழுகிறதல்லவா? ஆம் இவர் யார்?

(தொடரும்)

# இறைபணியில் நிறைவாழ்வுகண்ட

## அருட்சகோதரி ஆன்மேரி

திருக்குடும்பக் கன்னியர்சபையினில் பூத்தமலரான அருட்சகோதரி ஆன்மேரி தன் பணி வாழ்வில் (50) ஐம்பது ஆண்டுகள் நிறைவினில் இறைவனுக்கு நன்றி செலுத்திய நன்னாள் வவுனியா திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கும், அவர்களால் வழி நடத்தப்பட்ட அன்பு நெஞ்சங்களுக்கும் ஓர் பொன்னாள்.

மாகாணத்தலைவி உட்பட சக சகோதரிகளும், திருக்குடும்பத் துணை உறுப்பினர்களும் அன்பு நெஞ்சங்களும் அழகாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் சூழ்ந்திருக்கக் காலை ஏழு மணிக்கு மன்னார் ஆயர் பேரருட்பெருந்தகை இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் ஏழு அருட்குருக்கள் இணைந்து விழாநாயகரைப் பவனியாகப் மங்கள இசையுடன் அழைத்து வந்து நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி ஆரம்பத்தில் ஆயர் தமது முன்னுரையில் இன்று யூபிலி காணும் அருட்சகோதரி. ஆன்மேரி ஐம்பது ஆண்டுப் பணி வாழ்வில் எங்காவது, அதிபராகப் பணியாற்றியதை (சுப்பீரியர்) நான் கேள்விப்படவில்லை, அல்லது பெருங் கட்டிடங்களைக் கட்டியெழுப்பியதாகவும் அறியவில்லை. அப்படியாக வாழ்ந் திருப்பின் வாழும் நாட்களிலும் ஏன் அவளது இறப்பின் பின்னும் அவளது வாழ்வை நினைவூட்டும் சின்னங்களாக அவை காட்சியளிக்கும். ஆனால் இவளோ பெரும் பட்டம் பதவிகளையோ, பேர் புகழையோ விரும்பாத இலைமறை காயாக வாழ்ந்து ஏழை எளியவர்களை, வாழ்க்கையில் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

சிறுவர்களுக்கான

தொடர் குறுநாவல்

# ஒரு சிறிய புதுமை

தமிழ் வடிவம்: எஸ். எம். யோசவ்

டமிக்கோ அடிகள் அடிக்கடி பெப்பினோவுக்கு அசிசியாரைப் பற்றி நிறையக் கூறியிருந்தார். புனித அசிசியார் உயிரோடு அசிசி நகரில் நடமாடுவது போல அப்படி நிதர்சனமாகப் புனிதரைப் பற்றி அடிகளார் கதை கதையாகக் கூறுவார்.

தொழுவம் நடாத்தும் நிக்காலோவின் மகன் ஜிபான்னி முன்பு கூறிய செய்தியும் பெப்பினோவுக்கு அதிகஊக்கமளித்தது. நோயுற்ற தன் செல்லப் பூனையை புனித அசிசியின் பதிக்கு எடுத்துச் சென்று குணமடைந்தது என்று ஜிபான்னி சொன்னதைக் கேட்ட அவன் எப்படியும் வைலெற்றாவையும் அத்திருத்தலத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும், அதனால் அது உயிர் பிழைக்க வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தான். வைலெற்றா இறந்து விடுமாயின் அவனுக்கு எல்லாமே இழந்தது போன்ற நிலைதான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

மிண்டி போட்டு எழுப்புவது போல மிகத் தெண்டிமையாக வைலெற்றாவை எழுப்பி பெருமுயற்சியுடன் அசிசியின் ஒடுக்கமான வீதி வழியாக மெல்ல மெல்ல நடத்திச்சென்று அசிசியாரின் பேராலயம் அமைந்திருந்த மலைக்குன்றுக்கு எப்படியோ கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டான். அழகிய இரட்டை வாயில்களைக் கொண்ட அப்பேராலயத்தின் கீழ்ப்பகுதியில் அன்று கடமையில் இருந்தவர் பேர்னாட் என்ற துறவியாவார். அவர்தான் ஆலயத்தினுள் செல்பவர்களுக்கு அனுமதி வழங்குபவர். பேர்னாட் புதிய துறவி; மிகவும் கண்டிமை உடையவர்.

''பக்தியற்ற நாடோடிப் பயலே, இந்த அசுத்தப் பிராணியை அழைத்துக்கொண்டு வெளியே போ; இந்த மிருகத்தை ஆலயத்துக்குக் கொண்டுவர உனக்கு எவ்வளவு துணிச்சல், பூச்சியமான இப்புனிதரின் திருத்தலத்தில் ஒரு கழுதையைக் கொண்டுவருவது அநாச்சாரம்'' என்று கடிந்து எரிந்து விழுந்தார் துறவி.

> **கழுதைக்கு நடந்தது என்ன?**
>
> இந் நாவலின் முடிவை புள்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள். கண்கவர் பரிசில்கள் கைநிறையத் தருவோம். (ஆ-ர்)

மக்கள் ஒருவர் ஒருவராய் ஏறிச்செல்லும் ஒற்றை வழி மாடிப்படிகளில் இந்த நாற்கால் விலங்கு எப்படி ஏறிச்செல்லும் என்றுகூட பெப்பினோ சிந்தித்தும் பார்க்கவில்லை. முட்டாள்தனமான ஒரு யோசனைதான் அது. கட்டளைப்படியே கழுதையை இழுத்துக்கொண்டு ஆலய வாயிலை விட்டு வெளியேறினான் சிறுவன். ஓரமாய் நின்று கழுதையில் சாய்ந்தபடியே தனது எண்ணம் நிறைவேற வேறு என்ன செய்யலாம் எனச் சிந்திக்கலானான். வெளியே விரட்டப்பட்டதனால் அவன் சிறிதும் மனம் தளரவில்லை.

சிறு வயதிலேயே தனது பெற்றோரை இழந்தவிட்ட பேரதிர்ச்சி அவனைச் சிலகாலம் வருத்தியபோதும் தன்னைப் போன்ற பலரோடு ஒப்பிடுகையில் தனது தற்போதைய நிலை பரம் மோசமானதல்ல எனப் பெப்பினோ எண்ணிக்கொண்டான். தனது சீவியத்துக்கு ஏதோ ஒருவகையில் தொழில் என்று ஒன்றிருக்கிறதே என்ற மனத்திருப்தியோடு வாழ்ந்து வந்தான். ஆனால் வைலெற்றாவுக்கு நோய் பிடித்ததனால் தனது தொழிலுக்கே இப்போது ஆபத்து வந்து விட்டது என்ற கவலை அவனை வாட்டத் தொடங்கியது.எப்படியாவது அசிசிப் பதியரின் திருவடியில் தன் கழுதையைக் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டால் அது தப்பாமல் குணமடைந்து விடும் என்ற நம்பிக்கை அவனிடம் வேரூன்றியிருந்தது.

''கவலையின்றி இவ்வுலகில் வாழ வேண்டுமாயின் 'முடியாது' என்று எதையும் எண்ணிவிடக் கூடாது, முயன்றால் முடியாதது எதுவுமில்லை'' என்று என்றோ ஒருநாள் பெரியவர் ஒருவர் அவனுக்குக் கூறிய அறிவுரை அவனுக்குத் தைரியமளித்தது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசிக்கப் பங்குத் தந்தை டமிக்கோ அடிகளிடஞ் சென்றான் பெப்பினோ.

சிறிய நெற்றியும், ஒளி சிந்தும் கண்களும், பங்கு மக்களின் துயரமெல்லாந் தாங்குவது போன்ற அகன்ற தோள்களுமுடைய அன்புத்தந்தை டமிக்கோ, ''புனித அசிசியார் ஆலயத்தின் பரிபாலகரிடஞ் சென்று உனது கோரிக்கையை விளக்கிக் கூறினால் அவர் உனது மனுவை விசாரித்து ஆவன செய்வார். அசிசித் துறவிகள் சிரேட்டரான அவரிடந்தான் உனது கோரிக்கையை ஏற்கவோ நிராகரிக்கவோ அதிகாரமுண்டு'' என ஆறுதல் மொழியாலே ஆதரவளித்தார்.

சிறுவனின் விசுவாசத்தை உறுதிப்படுத்த அவனது கழுதையைப் புனிதரின் கல்லறைக்கு அழைத்துச் செல்லும்படி அனுமதிப்பது தவறான செயல் ஆகாது; அப்படிச் செய்வதால் ஆலயப் புனிதம் எப்படியும் குறைந்துவிடாது என்றுதான் டமிக்கோ அடிகளார் கருதினார். ஆனால் புனித அசிசியாரின் ஆலய நிருவாகமோ முகாமையோ அவர் கையில் இல்லையே. அவர் தான் என்ன செய்யமுடியும்? ஆலயப் பரிபாலகர் என்ன செய்வாரோ என்றுதான் டமிக்கோ அடிகளார் ஆவல் கொண்டிருந்தார்.முகாமைத் தலைவர் எப்படி நடந்துகொள்வார் என்பதை அடிகளார் ஊகித்தாரெனினும் சிறுவனிடம் அதைத் தெரிவிக்கஅவர் விரும்பவில்லை.

(வளரும்)

# குடும்பம் - பெண்கள் - வன்முறை

*சர்வதேச மகளிர் தினத்தை (8-3-98) ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.*

(ஆ–ர்.)

குடும்பத்தில் பெண்கள் வன்முறைக்குள்ளாவது படிப்பு வாசனையற்ற குடும்பங்களில் மட்டும்தான் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. ஏனெனில் சமுதாயத்தின் கீழ் மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரையிலான படித்து, பட்டம் வாங்கிய குடும்பங்களில் கூட இது சாதாரணமாகக் காணப்படுகின்றது.

பொதுவாகவே, பெண்கள் சிறுவயதிலிருந்தே வன்முறையை எதிர்க்கமுடியாத ஒரு மனநிலையில்தான் வளர்க்கப்படுகிறார்கள் அல்லது வைக்கப்படுகிறார்கள். இதன் காரணமாகவோ என்னவோ குடும்பத்தில் ஆண்மட்டும் கணவனாகவும் அல்லது தந்தையாகவும் இருந்து பெண்ணை உடல் ரீதியாகத் தாக்குவது என்பது இயல்பான ஒரு நிகழ்ச்சியாகவே பெரும்பாலும் கருதப்படுகின்றது. இதனைப் பெரிய தவறென யாரும் கேள்விக்குட்படுத்துவதில்லை. ஆனால் தன் உடல்மீது செலுத்தப்படும் வன்முறையை ஒரு பெண் எதிர்த்துத் திருப்பித் தாக்க முற்படும்போது அது மிகவும் ஒரு "முறைகேடான செயல்" என்று விமர்சனங்களுடன் வர்ணிக்கப்படுகின்றது.

உடல் ரீதியான தாக்குதல்கள் பெரும்பாலும் குடிகாரக் கணவனிடமிருந்தே எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் தனக்குள்ள பொறுப்புக்களையும், கடமைகளையும் விட, தனது சொந்த தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், விரக்திநிலைகள், எடுத்த காரியங்களில் ஏற்படும் தோல்விகள் என்பன அவனை ஆட்டிப்படைக்கின்றன. குடிபோதையினால் இவற்றை மறக்க முயன்றால் கூட அவனால் முடிவதில்லை. தான் ஜெயிக்கக்கூடிய ஒரே இடம் தனது வீடு ஒன்றுதான் என்ற உணர்வுதான் மேலோங்கி விடுகின்ற நிலையில் தனது பலத்தை எல்லாம் மனைவி மீதோ, பிள்ளைகள் மீதோ சாப்பாட்டின் மீதோ அல்லது ஏதோ ஒன்றின்மீதோ காட்டவேண்டிய பரிதாப நிலைக்குள்ளாகின்றான். இந்த போலித் திருப்தி நீடித்து நிற்க முடியாதபோது அங்கு மீண்டும் மீண்டும் வன்முறை தலைதூக்கவே செய்கிறது.

நேரடியான உடல்தாக்குதல்கள் மட்டுமே வன்முறை என்று கருதக் கூடாது. குடும்பத்தில் பெண்களுடைய உழைப்பு உத்தியோகம் ஆனாலும் அல்லது வீட்டுக் காரியங்கள் ஆனாலும் மிகவும் மலிவானதொன்றாகக் கருதப்படுகின்றமையும் ஒருவகை வன்முறையேதான். இப்படியான குடும்பங்களில்தான் பெண்கள் நாளாந்தம் அவமதிப்புக்களுக்கும், வசைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். பெண் என்பவள் எப்போதும் தன்னைவிடத் தாழ்ந்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் தன்னையே சார்ந்திருக்க வேண்டும் என்ற நினைவுகள் மேலோங்கியிருக்கும் ஒரு கணவன் குடும்பத்துக்காக அவள் செய்கின்ற ஒரு செயலைக்கூட பாராட்டமனமின்றி குறை கூறிக்கொண்டே இருப்பான்.

இன்று எத்தனையோ பெண்கள் திருமணமானதும், தமது அனைத்துத் திறமைகளும் இழந்தவர்களாய் அல்லது அழிக்கப்பட்டவர்களாய் வெளியில் சொல்லவும் முடியாமல் வேதனையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குடும்பம் என்றொரு ஸ்தாபனத்துக்காக இவர்கள் தமது திறமைகளை மட்டுமல்ல, தமது சொந்த ரசனைகள், சிந்தனைகள் அத்தனையையும் தியாகம் செய்தாலும் கூட, அந்தத் தியாகம் மதிக்கப்படாமல் இருக்கின்றபோது, அது எவ்வளவு பெரிய பாதிப்பை அவளுள் ஏற்படுத்திவிடுகின்றது என்பதை சிந்திக்கத் தவறிவிடுகின்றார்கள். இதுவும் மறைமுகமான ஒரு வன்முறையே.

திருமதி
P. செபஸ்தியாம்பிள்ளை
முன்னாள் உதவி நூலகர்
யாழ். பொது நூலகம்

இவ்வளவையும் அனுபவிக்கும் பெண்ணால் எப்படி இவற்றைத் தாங்கிக் கொள்ள முடிகின்றது என்றால் அதையும் அந்தக் குடும்ப அமைப்பே அவளுக்கு உருவாக்கிக் கொடுத்துவிடுகின்றது எனலாம். பிரிந்து வாழமுடியாத பெண் பெரும்பாலும் பல குழந்தைகளின் தாயாகவோ அல்லது வேலைக்குச் செல்லும் தகுதியும் தைரியமும் இல்லாதவளாகவோதான் இருப்பாள். எனவே தன்மீது செலுத்தப்படும் வன்முறைகளை அவள் தாங்கியே ஆகவேண்டும் என்ற நிலைக்கு உள்ளாகிறாள். குடும்பம் என்பதை தவிர்க்க முடியாத பந்தமாக ஏற்றுக்கொண்டு வேதனையுடன் வாழ்பவர்கள் பலர். ஒரு சிலர் மட்டும் தமக்கென்று ஒரு சுயவிலாசம் தேவை எனக் கருதி, குடும்பம் என்ற வட்டத்துக்குள் இருந்து தைரியமாக வெளியேறி விடுவதுடன், தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டியும் விடுகின்றனர்.

பொதுவாக நோக்கினால் குடும்பம் என்ற அமைப்பு பெண்ணின் ஆளுமையை முழுமையாக வளர்ப்பதாக இல்லை என்றே கூறலாம். அபூர்வமாய் ஒரு சில குடும்பங்கள் "அன்புக்கும் பாசத்துக்கும் அடிப்படை குடும்ப அமைப்பு" என்பதை ஏற்று வாழ்ந்தும் காட்டினால் அவை கோவில் என்று போற்றப்பட வேண்டியவை.

# மனித இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்

## அருள்தந்தை ஜெபநேசன்



*ஜெபநேசன் அடிகளாரால் அன்பாக வளர்க்கப்பட்ட S. ஜோண்சன் எழுதிய இக்கட்டுரை அடிகளாரின் இறப்பின் ஓராண்டை(29.2.98)ஒட்டி பிரசுரமாகின்றது.*

(ஆ - ர்)

மறைந்தும் மறையாது மனித இதயங்களில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் அருள்தந்தை இல்லறி ஜெபநேசன், முக்கியமாக அடக்கி ஒடுக்கப்பட்ட மனித இதயங்களில் கலங்கரை விளக்காக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார்.

"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மாவிற்கு கேடு விளைந்தால் அதனால் அவனுக்கு வரும் பயன் என்ன"? என்ற இறைவார்த்தையை நிறைவிசுவாசத்துடன் நெஞ்சிலே பதித்தவர்.

இந்த பாதையில் பிறரையும் இட்டுச் சென்றார். ஒவ்வொருவரும் போய் சேர வேண்டிய இலக்கை காட்டினார். வறண்டு கிடந்த இதயங்களில் அன்பென்னும் மழையை பொழிய வைத்து ஆதரித்து செழுமை கொடுத்தார். உண்மை உறவுகளை இழந்து அனாதைகளாக ஆதரவற்றவர்களாக, வாழ்ந்தும் பயனில்லை என்ற விரக்தியின் விளிம்பில் உள்ளோரை தானே இனம் கண்டு செம்மையான சுகமான வாழ்க்கை நிம்மதியைக்காட்டினார். உருவாக்கிக் கொடுத்தார், வாழ்க்கை என்னும் கண்களைத் திறந்து பார்க்க முற்படும் ஒவ்வொருவருக்கும் நல்ல வாழ்வை தெரிந்தெடுக்க அறிவுறுத்தினார், பேச தொடங்குவோருக்கு உண்மையை பேச வலியுறுத்தினார். மனித தண்டனையை விட மனிதனைப் படைத்தவனின் தண்டனையை நம்பிக்கையோடு மனித இதயங்களில் பதிய வைத்தார். எமக்கேற்படும் துன்பங்கள் அனைத்தும் எம்முடைய ஆன்ம பலத்திற்கே உரம் ஊட்டுகிறது. ஆன்ம உறுதியாக இருக்க ஆன்மா இறைவனை நாடவே எமக்கு வாய்ப்பு வசதிகளை இறைவன் தந்துள்ளார் என்பதை அடிக்கடி தெளிவுபடுத்தி காட்டியுள்ளார்.

ஏமாற்றி வாழ்வோரை பற்றியும் மற்றவர்களின் சொத்தில் சுகம் காண்போரைப்பற்றி அவரது மனம் வெம்பியதுண்டு. ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் அடிப்படையிலேயே தான் அவனது மரணம் இருக்கும். நித்திய ஜீவனுள்ள வாழ்வை நாம் சுவீகரிக்க இம் மரணம் ஆரம்பம் என்று அவர் அடிக்கடி கூறுவார். உன் உள்ளம் எப்படியோ அப்படியே உன் சிந்தனையும், சிந்தனை எப்படியோ அப்படியே உன் செயல்களும் இருக்கும் என்பது அவரது வாதம். இவரைத் தேடி வரும் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு மானிடரின் உள்ளக் குறிப்பை தன் உள்ளத்தில் பதித்து விடுவார். நன்மை, தீமை இரண்டையும் பதித்து விடுவார். எத்தனையோ மனிதர்களின் பிரச்சனைகளை இலகுவில் தீர்த்து விடுவார். இவை போன்ற நான் நேரில் பார்த்த சம்பவங்களுமுண்டு தனது மனதில் பட்டவைகளை வெளிப்படையாக சொல்லிவிடுவார், சில சமயங்களில் பகிர்ந்த அனுபவமும் உண்டு.

அதன் பின் தான் இருளிலிருந்து ஒரு நிலையான ஒளியை காண முடிந்தது. இது எனக்கு மட்டுமல்ல பலர் இவரிடத்தில் பகிர்ந்து நிறைவும் கண்டுள்ளனர். இவர் ஒரு சரித்திரத்தின் அணைக்கட்டு. அனுபவ வாழ்க்கையின் மனிதர். அறிவென்னும் ஆடையை அகத்திலே பதித்தவர், நீதி, நேர்மை என்னும் உண்மைகளிலேயே தான் இவரது முழு வரலாறும் அடங்கிக் கிடக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு குருவை, மா மனிதரை இழந்து விட்டோம். இவரது இழப்பு யாழ் திருச்சபையை பொறுத்த மட்டில் ஈடு செய்ய முடியாத இழப்பாகும், வன்னி மண் காணாத இழப்புமாகும்.

மனித வாழ்க்கையில் தினம் தோறும் சவால்களையே சந்தித்து கொண்டிருக்கும் ஒரு வாழ்வு அச்சவால்களை சமாளிக்கக் கூடிய மன வலிமை, ஆன்ம உறுதி எமக்கு வந்துவிட்டால் எந்தவொரு சவால்களினாலும் எம்மை அசைக்க முடியாது என்ற உறுதியோடு தன்னுடைய கடுமையான நோயிலும், மனக்கஸ்ரங்களிலும் தனது பணியைதொடர்ந்தார். இவரது வாழ்நாளில் பணிவாழ்வில் உணர முடியாத வார்த்தைகளை அனுபவ ரீதியாக அறிவுரைகளை கேட்காது அறிவிலிகளாக இருந்தவர்கள் அவர் இறந்த பின்பே இவர் எதற்காக இவைகளைக் கூறினார் என்பதை உணர்கிறார்கள். இவரது சிந்தனைகள், செயல் திறமைகள் முழுமை அடையவோ தெரியாது, இவரது மரணமும் திடீர் என்று ஏற்பட்டது. இவரை ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருந்தார்கள். எனினும் இவரது மரணத்தின் பின்னர் இவருடைய நற்பண்புகளை செயல் திறமையை எண்ணிப் பார்க்கின்றனர்.

இவருடைய குருத்துவ வாழ்வு ஒரு புனிதமானது, இறைவனில் ஆழமான விசுவாசம் கொண்டவர் எச்செயலை செய்தாலும் இறைவனுக்கென்றொரு தனி இடத்தை கொடுப்பார். சுமார் பதினான்கு வருடங்கள் நான் இவரோடு வாழ்ந்தேன். இல்லை. வளர்க்கப்பட்டேன். எனது பெற்றோரோடு இருந்த காலத்தை விட இவரோடு இருந்த காலமே அதிகம். எனவே இவரை நான் முழுமையாக சுவைத்துள்ளேன் இவருடைய ஒவ்வொரு அசைவுகளையும் நான் புரியுமளவிற்கு இவரோடு பின்னிப்பிணைந்திருந்தேன். இவரோடு நான் இருந்து அனுபவித்து சுவைத்த நல்ல எண்ணங்களை, பண்புகளை, அறிவுரைகளை, செயற்பாடுகளை, வஞ்சகமற்ற நல் மனதை அசைபோட்டு பார்க்கையிலே என் அன்புக்குரிய, பெரும் மதிப்புக்குரிய புனிதராக என் மனக்கண் முன்னே தோன்றிக் கொண்டு இருக்கின்றார். இவரைப் பற்றி இவருடைய வாழ்வைப் பற்றி ஆழமாகசிந்தித்தால் முள்ளின் மீது உட்காந்து கொண்டு றோஜாப் பூவைப் பற்றி பாடுகின்ற சக்தி வந்து விடும்.

மரத்தில் இருந்து உதிர்ந்து விழும் சருகுகள் பசுமை இலையை பார்த்து ஏங்குவது போன்று நமக்கு இவரைப் போலவே வாழ வேண்டும் என்ற எண்ணம் உதிக்க வேண்டும், வலிமையான உள்ளத்தில் இன்பத்தோடு வரும் துன்பத்தை இனம் காணவேண்டும், அதில் இவரது வாழ்வு ஒரு அடிப்படையாகும்.

சு. யோண்சன்
மனித முன்னேற்ற நடுநிலையம்
கிளிநொச்சி.

எம்மோடு இருக்கிறார் என்ற ஒரு கற்பனையில் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறோம். அதனால் தான் புதிய வாழ்வை மழலையாய் அனுபவிக்கப் போயிருக்கும் இவரது ஆன்மா சாந்தி அடைய வேண்டும். இவரது ஆன்மாவோ சாந்தி அடைந்து விட்டது, என்பதை நாம் அகக் கண்களால் பார்க்க முடிகிறது. இவரது அனுபவவாயிலாக எமக்கு கற்பித்த உண்மைகள் இப்போது தெட்டத்தெளிவாக்தெரிகிறது. துன்பத்தை இன்பமாக மாற்றிக் கொள்ளுங்கள், இருள் வாழ்வை வெளிச்சமாக்கிக் கொள்ளுங்கள். தோல்விகளை வெற்றிகளாக்குங்கள் எதற்கும் கவலைப் படாதீர்கள். இறை சித்தம் என்ற உண்மையை தெளிவாக்குங்கள் அதனால் உங்கள் துயரங்களைப்போக்குங்கள் வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள்,

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# தேசமே தேசமே உன் உத்தேசம் என்ன?

எங்கள் சுகங்கள் எல்லாம்
சோகங்களாக மாறிவிட்டன!
எங்கள் கனவுகள் எல்லாம்
காணாமல் போய்விட்டன.
முகமிழந்த மனிதர்களாக...
முகவரிகளைத் தொலைத்தவர்
ளாக...
இருந்தும்...
இன்னும் வாழவேண்டும் என்ற
தலைவிதி... தவிப்பு...

வாதாடிப் பெறமுடியாததை
போராடிப் பெற முனைந்த
ஒரு மக்களினத்தின்
மௌனக் கதறல்
கேட்கிறதா?

மூச்சிழந்து பேச்சிழந்து
உருவிழந்து திருவிழந்து
உரிமையிழந்து பெருமையிழந்து
நிற்கும் எங்கள் வாழ்க்கைக்கு
ஒரு விடிவில்லையா?
எங்கள் கண்ணீரிற்கு
ஒரு முடிவில்லையா?

எங்களது
சொந்தக் கதைகள்
ஒவ்வொன்றுமே
சோகக் கதைகள்தானே...
தரித்திரத்திலேயே
எம்மவர் பலருடைய
சரித்திரங்கள் முடிவுறுகின்றன.
யுத்தத்தின் கோரப் பற்கள்
சப்பித் துப்பிய
சதைப் பிண்டங்களாக
நாங்கள் இன்று...

இங்கே
தீர்வுகள் பற்றிய பேச்சு இல்லை
ஆனால்
அதிர்வுகள் தொடர்கின்றன.

பயம்...
பதட்டம்...
பரதவிப்பு...
பாழாய்ப்போன வாழ்க்கை!

இந்த மண்
மனநோயாளிகளின்
மருத்துவ மனையா?

அசாதாரணங்கள்
இங்கு
சாதாரணங்களாகி விட்டன!

வீடுகளில் முகாம்கள்
வீதிகளில் வீட்டுக்காரர்கள்.
ஆறுமணியுடன் நாங்கள்
அடங்கிப் போக வேண்டுமாம்.

தேசமே தேசமே
உன் உத்தேசம் என்ன?

— நேசன் அடிகள் —

# மரணத்தின் பின்....

— அருட்சகோதரி ரஞ்சி, கொழும்பு

மனிதன் உலகில் பிறந்தவுடனேயே அவனுக்கு நிச்சயமானது, ஒன்றே ஒன்று. அது தான் மரணம்.

செல்வச் செழிப்பிலே
திகழ்ந்தாலும்
பட்டுடுத்தி பகட்டாக
வாழ்ந்தாலும்
சுகபோக வாழ்வே
சுகமென கொண்டாலும்

"மரணம்" எம்மை அழைக்கும்போது இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தான் செல்லவேண்டும். இதனை நன்கு அறிந்திருந்தும் எமது வாழ்க்கை ஏனோ, "நாம் இவ்வுலகில் நிலையாகவே வாழ வந்தோம்" என்பதற்கிணைய அமைந்து விடுகின்றது. "ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா" என அன்று பாடினான் கவிஞன். இறக்கும் வரையிலான இந்த சொற்ப ஆயுள் காலத்தினுள்ளே போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவு, அகந்தை, ஆணவம் அப்பப்பா... எத்தனை...... எத்தனை.........

மரணங்கள் பல எம்மைச் சூழ நிகழ்ந்தும், (எம் வீட்டில், பக்கத்தில்) அவை எமக்கு கொண்டு வரும் செய்தியினை உணர்ந்து கொள்ளாது இருக்கின்றோம், மறு உலக வாழ்வு பற்றிச் சிந்திக்காது செயல்படுகின்றோம்.

இறந்த பின், இறைவனை முகமாய் தரிசிக்க வேண்டுமாயின் அதற்காக எம்மை இப்போதே தயார் செய்ய வேண்டும். விண்ணுலகில் பிரவேசிக்க வேண்டுமாயின் எமது மண்ணுலக வாழ்வை சீர்தூக்கி பார்த்து அதனை சீராக்கி, நேராக்கி இறைவனுக்கு ஏற்புடையதாக மாற்றவேண்டும். பிறரை அன்பு செய்து, அவர்களை மன்னித்து, சுயநலம் அற்றவர்களாய் வாழ வேண்டும். எம்மை வெறுப்பவருக்கும் அன்பு காட்டுமாறு பணிக்கின்றார், நம் ஆண்டவர்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## மனச்சாட்சி

மானுடம் பிறந்ததுமுதற்
தேடப்படுவது
விண்ணிலும் மண்ணிலும்
காற்றிலும் நெருப்பிலும்
கடலிலும் நதியிலும்
ஆற்றிலும் அணையிலும்
மலையிலும் முகட்டிலும்
பாதாளம் எங்கணும்
அப்பப்பா......
எங்கெல்லாம் தேடுவது?
அங்கெல்லாம் தேடினும்
எங்கணும் காண்கிலேன்...
அங்கெல்லாம்
இதைக் காணமுடியாது.
வேறு
எங்கே தேடுவது?
மனிதனுக்குள்ளே.
மனிதனுக்குள்ளேயா?
ஆம்.
இதை அங்குதான் தேட
வேண்டும்.
இது எப்படி இருக்கும்?
உருவமில்லாதது.
கண்டுகொள்ள வழி?
மனிதன் தான்
மனச்சாட்சிக்கு உருக்
கொடுப்பவன்
எப்படி?
இது செயலில் வெளிப்பட
மனிதம் மலரும்.
மாண்பு பிறக்கும்
விடியல் தெரியும்.
இது
இறைவன் குரலொலி
இதயத்தின் ஆழத்தில்
புதைக்கப்பட்டது.
சிலர்
அப்படியே புதைத்து
விடுகிறார்கள்.
சிலர்
விதைக்கிறார்கள்
புதைத்தவன்
புரளிகளில் புரண்டு
புரையோடிப் போகிறான்.
சமுதாயத்தின் புண்ணாகி
ஆறாத ரணமாகின்றான்.
விதைத்தவன்
வேதத்தின் வித்தாகின்றான்.
தெய்வத்துள் தெய்வமாகி
வையத்துள் வாழ்வாங்கு
வாழுகின்றான்.

ம. யேசுதாசன்
மறை ஆசிரியர்

## மனித இதயங்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றை எல்லாம் தந்தையவர்கள் தன்னகத்தே கொண்டிருந்தார். இதனாலேயே தான் இவரும் தனது நோய் நொடி மனக்கஸ்ரங்கள் அனைத்தையும் தனக்குள்ளே பூட்டினார். இதனால் தன்னையே இவ்வுலகை விட்டுப்பிரியச்செய்தார். எதையும் அமைதியாக இருந்து முடிவெடுக்கும் இவரது மனம் சாந்தியடைய சென்று விட்டது.

இவர் இறந்ததையிட்டு நாம் அழவேண்டியதில்லை. இவரின் காலத்தில் நாம் இருந்தோம் என்றதை நினைத்து பெருமிதம் அடைய வேண்டும். இறந்து போன அவருக்காக அழுது கொண்டிருப்பவர்களின்கண்ணீரைத் துடைத்து எழுந்து அவருக்கு வணக்கம் செலுத்துங்கள். இதைத்தான் நாம் செய்ய முடியும். அருள்தந்தையின் ஆன்மா சாந்தியடைய செபியுங்கள். அவரது காலடி சுவடுகளில் இருந்து இன்னும் சில மனிதர்கள் முளைத்தெழுவார்கள்.

# நற்செய்தித் தூண்டுதல் போட்டி இல. 1 இன்

## விடைகளும் பரிசு பெற்றோர் விபரமும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 வ | 3 ம | ன் | னி | ப் | 4 பு | ✱ |
| லை | ரி | றை | ✱ | 5 அ | மை | தி | ✱ |
| நி | த | நா | 6 உ | று | ✱ | ய | ✱ |
| ல | ண் | ல் | வ | ப | 7 சீ | து | 8 உ |
| த் | டு | அ | மை | து | தோ | ணி | மி |
| தி | ப | றி | க | ✱ | ன் | யை | ழ் |
| ல் | வ | ஞ | ள் | ✱ | ✱ | ✱ | ந் |
| ✱ | ர் | ர் | ✱ | 9 சூ | ழ் | ந் | து |

### பரிசு பெறுவோர்

1. A. றெஜி
   இல 2, அச்சக வீதி, யாழ்ப்பாணம்
2. A. M மஞ்சுரிக்கா
   "பிறேமஸ்ரன்" நெல்லியடி, கரவெட்டி
3. அருட்பிரகாசம் ருஷானா
   9 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### பாராட்டுப் பெறுவோர்

1. மேரி உதிஸ்ரா நெமிசியர், குருநகர், யாழ்ப்பாணம்.
2. ப. இ. அனிற்றா லொறெற், யாழ்ப்பாணம்.
3. கோமதி மகேஸ்வரன், யாழ்ப்பாணம்.
4. றஜனி சமிநாதன், யாழ்ப்பாணம்
5. S. அமலி இரேசியா, கொழும்பு 13.
6. அருட்பிரகாசம் நிலாந்தினி, நெடுந்தீவு.
7. பி. அருளானந்தம், தவசிகுளம், மிருசுவில்.
8. செ. றொ. அருட்செல்வம், முனை, பருத்தித்துறை.
9. மரியகொன்சி செல்வரட்ணம், முனை, பருத்தித்துறை.
10. செ. நிக்ஷன் ராஜசெல்வம், முனை, பருத்தித்துறை.
11. றோ. சாள்ஸ், யாழ்ப்பாணம்.

நற்செய்தி தூண்டுதல் போட்டி இல-01இல் 37 பேர் பங்கு பற்றினர். மகிழ்ச்சியாக இருக்கிறது! பாராட்டுக்கள்!!

கொழும்பு- 13 நல்லாயன்கன்னியர் மடத்தில் இருந்து S. அமலிகிறேசியா பங்கு பற்றிப் பாராட்டுப் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்னும் அநேகமானவர்கள் பிறமாவட்டத்தில் இருந்தும் பங்கு பற்ற வேண்டுமென விரும்புகின்றோம். சரியாக எழுதிய 14 பேரில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பரிசு பெறும் மூவருக்கும் சான்றிதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.

(ஆ - ர்)

## எழுத்தாளர்களே!

'பாதுகாவலன்' உங்கள் பத்திரிகை. இதன் வளர்ச்சி உங்கள் வளர்ச்சியே, நல்ல கருத்துச் செறிந்த ஆக்கங்களை எமக்கு அனுப்பிவையுங்கள், தகுதியானவை பிரசுரிக்கப்படும்.

(ஆ—ர்.)

## இறைபணி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொந்த உள்ளங்களைத் தொட்டு வாழ வழிகாட்டி அந்த உள்ளங்களிலே கல்லால் அமைக்கப்படாத அன்பில் அடித்தளமிட்ட பெருங் கட்டிடங்களைக் கட்டி வைத்துள்ளார். அவ்விதமான அர்ப்பணவாழ்வில் ஐம்பது கண்டு விட்ட இந்தச் சகோதரியுடன் நாமும் இணைந்து இறைவன் இந்நாள்வரை புரிந்த அருஞ்செல்வங்களுக்காக இத் திருப்பலியினூடாக நன்றி சொல்வோம் என்று குறிப்பிட்டார்.

மறை உரையாற்றிய பங்குத் தந்தை நவரட்ணம் அடிகள் இந்த விழாநாயகி தனது விசுவாசப் பயணத்தில் மணவாளனை வரவேற்க விழிப்புடன் எந்நேரமும் விளக்கும், அதைப் பற்ற வைப்பதற்கு வேண்டிய எண்ணெயும், திரியும் குறைவின்றி நிறைவாக வைத்துக் கண் விழித்துக் காத்திருந்த நற்செய்தி புகழும் விவேகமுள்ள கன்னியாக வாழ்ந்து வந்துள்ளார். எடுப்பான வீண் ஆடம்பரங்களினாலோ, நீர்க்குமிழியானஉலக மாயைகளினாலோ தட்டுத் தடுமாறிடாது எப்பொழுதும் தன் செபதவம் நிறைந்த வாழ்வில் நிறைவு கண்டிருக்கின்றார் என்று குறிப்பிட்டார்.

★ யூபிலி நாயகியின் ஞானவழிகாட்டுதலில் வளம்பெற்ற அன்புமகன் மோ. மாற்கு யேசுதாசன்.

## 31ஆம் நாள் நினைவு



அமரர் திரு தோமஸ்
பேதிருப்பிள்ளை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1926 | 13.2.1998 |

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர்"

(யோவா. 11 : 25)

உலகை நீத்து சென்றாலும்
உள்ளம் உம்மை மறவாது
உறவு என்றும் தொடர்ந்து
வரும்
உற்ற வாழ்வும் மலர்ந்திடுமே

மனைவி
பெறாமக்கள், உறவினர்கள்.

A/72/98

### கிளி/முல்லை மறைக்கோட்ட
## பாதுகாவலன் இணைப்பாளராக ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள்

கிளி / முல்லை மறைக்கோட்ட பாதுகாவலன் இணைப்பாளராக அருள்திரு ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் அண்மையில் வன்னியில் நடைபெற்ற குருக்கள் கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமனத்தின் பின்னர் பாதுகாவலன் பணிமனையோடு தொடர்பு கொண்ட ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் எமக்கு தெரிவித்த விடயங்கள் இவை,

1) பாதுகாவலனை வாங்கவும், படிக்கவும் வன்னியில் அதிக ஆர்வ மூட்டுதல். இதற்கு உதவியாக உடனடியாக 200 பாதுகாவலன் பிரதிகளை கொழும்பு பொரளை குருக்கள் இல்லத்திற்கு அனுப்புதல்.
2) அதிக கட்டுரைகள், செய்திகள் மற்றும் விடயதானங்களை பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்க வழிசெய்தல்,

ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் கிளி - முல்லை மறைக்கோட்ட பாதுகாவலன் இணைப்பாளராக பணியாற்ற முன் வருவது எமக்குப் பெரும் மகிழ்ச்சியும் உற்சாகமும் தருகின்றது. உங்கள் கரத்தை நீட்டுங்கள். நாங்கள் இறுகப் பற்றிக் கொள்ளுவோம். விடயதானங்களை அனுப்புங்கள். முன்னுரிமை கொடுத்துப் பிரசுரிப்போம். விடயங்கள் உங்கள் பகுதியில் இருந்து பெற்றுக்கொள்வதுதான் கடினமாக இருக்கின்றது. மறையாசிரியர் ஆரோக்கியநாதர் மூலமாக அனுப்பி எமக்குக் கிடைத்த விடயங்கள் அனைத்தும் பிரசுரித்துள்ளோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். தொடரட்டும் உங்கள் பணி.

(ஆ - ர்)

## பொன்விழா ஓவியப் போட்டி

இலங்கையின் சுதந்திர 50 ஆண்டு நிறைவையொட்டி மனித முன்னேற்ற நிலையத்தால் நடாத்தப்பட்ட பொன்விழா ஓவியப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

1ஆம் இடம்
செல்வன் பி. எட்மன்
புனித யாகப்பர் பங்கு

2ஆம் இடம்
சகோ. ரி. நிருபன் நிசாநட்
புனித சவேரியார் குருமடம்

3ஆம் இடம் (இருவர்)
(I) சகோ ஆர். எழில்றாஜன்
புனித சவேரியார் குருமடம்
(II) செல்வன் யோ. நிமல்றாஜன்
ஆசனக் கோவில் பங்கு

## சிலுவைப்பாதை சிந்தனைகள் திருவழிபாட்டு நிலையத்தில்!

"யேசுவின் சிலுவைச் சுவட்டில்" என்ற தலைப்பில் சிறுவருக்கான சிலுவைப் பாதையும் "சிலுவைப் பாதை கிறிஸ்தவனின் பாதை" என்னும் தலைப்பில் வளர்ந்தோருக்கான சிலுவைப்பாதையும், பாடுகளின் பாதையில் என்னும் தலைப்பில் குடும்பங்களுக்கான சிலுவைப்பாதை என்ற 3 றோணியோப் பிரதிகளை மறையாசிரியர் இ. ம. ஜெயசீலனின் ஆக்கத்தில் திருவழிபாட்டு நிலையம் வெளியிட்டிருக்கின்றது.

தவக்காலத்தில் இயேசுவின் பாடுகளுடன் எங்கள் பாடுகளையும் இணைத்து உயிர்ப்பை நோக்கி நகர இந்த சிந்தனைகளைப் படித்துப் பயன் பெறுங்கள்.

## தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டு வழிபாடு

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் நடத்தப்படும் தந்தை S. J. V. செல்வநாயகத்தின் வாழ்விற்கும் பணிக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஜனன நூற்றாண்டு வழிபாடு 31-03-98 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற இருக்கின்றது. யாழ் சுண்டுக்குளி புனித யோவான் தேவாலயத்தில் நடைபெற இருக்கும் மேற்படி வழிபாட்டில் வண. சேவக் சாம் அல்பிரட் பாராட்டுரை வழங்க, வடகிழக்கு மெதடிஸ் திருச்சபை தலைவர் வண. சி. கருணைராஜ் அருளுரை வழங்குவார் என, யாழ். கிறிஸ்தவ ஒன்றிய கௌரவ செயலாளர் வண. சொ. மில்ரன் காவலனுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

## எத்தனை முறையும் மன்னிக்கலாம்!

அபிர்ராஜன்

கூடச் சேர்ந்திருந்து பழகி
கொற்றவனின் செயல்கள் கண்டும்,
பித்துப் பிடித்துத் திரிந்தான் ஒருவன்
வரலாற்றில் பெயரைப் பதிக்க,
வகை தேடினான் யூதாஸ்.
ஆத்திரம் தீர்த்துக் கொள்ள
கங்கணங் கட்டினான்
அந்தக் கயமையாளன்.
பாத்திரத்திற் கையிட்டான்,
சாத்திரம் பார்ப்பது போல்
சரியான நேரம் தேடினான்.
சதிக்கும்பலின் வலையில்
விட்டிற் பூச்சியைப் போல்
வீழ்ந்தான் பேராசைக்காரன்.
திட்டம் தீட்டினர்
கும்பல் திண்ணமாக,
கத்தி வாளுடன் ஒரு கூட்டம்
கடவுள் மகனைத் தேடியது,
முத்தங் கொடுத்து
தத்தம் செய்தான் ஒரு நண்பன்.
பித்தனையும் மன்னித்தார் பிரபு.
இரத்தப் பழிவிடுமா அவனை
சித்தங் கலங்கியே
நாண்டு செத்தான் யூதாஸ்.
எத்தனை முறையும் மன்னிக்கலாம்
கத்தனைப் போல் நமக்கும்
கனிந்த உள்ள மிருந்தால். (வளரும்)

## ஒருநாள் கருத்தரங்கு என்றாலும் பயனுள்ளதாக அமைந்தது

செம்பியன்பற்று, நெல்லியடி, குடாரப்பு பங்குமக்களுக்கான 'அன்பியக்' கருத்தரங்கு ஒன்று செம்பியன்பற்று ஆலயத்தில் கடந்த 4-3-98 அன்று இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் அருள்திரு யேசுரெட்டினம், அருள்திரு ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு உரை வழங்கினர்.

"அன்பியம்" என்றால் என்ன? எவ்வாறு பங்கேற்கும் திருச்சபையை நாம் கட்டி எழுப்பலாம்? என்ற கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

செல் அடியின் மத்தியிலும் இடம்பெற்ற இக்கருத்தரங்கினை செம்பியன்பற்று பங்குத் தந்தை யாவிஸ் அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார்.

இக் கருத்தரங்கில் பங்குபற்றி பயனடைந்த பங்கு மக்கள் "ஒருநாள் கருத்தரங்கு என்றாலும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது" என்னும் மனநிறைவுடன் காணப்பட்டனர்.

R. மாலினி
நெல்லியான்

## மன்னார் மறைமாவட்டத்தில் பாதுகாவலன்!!!

அண்மையில் மன்னார் ஆயரைச் சந்தித்த பொழுது பாதுகாவலன் பத்திரிகையை நாம் இன்னும் மன்னார் மறைமாவட்டத்தில் விற்க முடியுமா? என்று கேட்ட பொழுது "பாதுகாவலனுக்கு ஒரு தனியான இடம் மன்னார் மறைமாவட்டத்தில் இன்னும் இருக்கிறது. ஆனபடியால் எமது "மன்னா" பத்திரிகை மூலமாக விளம்பரம் செய்து அதன் ஆசிரியர் மூலமாகவே சந்தாதாரர்களைச் சேர்த்துச் செயல்படமுடியும்" என்றார். எனவே பாதுகாவலனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 'மன்னா'பத்திரிகை ஆசிரியரிடம் உங்கள் பெயர்களைப் பதிந்து பாதுகாவலனைப் பெற்றுக்கொள்ளலாம்.

### யாழ் மரியன்னை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதில் சமூகத்தில் இன்று பெரும் பிரச்சனையை கொடுக்கும் மதுப்பழக்கத்தால் ஏற்பட்டுள்ள சமூக தாக்கங்களும், சீரழிவுகளும் முதன்மை பெற்றிருந்தன. எனவே இவை தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டு இவற்றைக்கட்டுப்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இவ் இளைஞர் குழுவின் இவ்வருட பிரதானமான செயற்பாடாக சமூகத்தில் மது ஒழிப்புக்கு ஆக்கபூர்வமான செயற்பாட்டில் இறங்குவது எனவும் இதன் முதற்கட்டமாக மதுஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஓவியப்போட்டி ஒன்றை நடத்தி அதில் தெரிவு செய்யப்படும் சிறந்த ஓவியம் சுவரொட்டியாக வெளியிடுவது எனவும் மதுப்பழக்கத்தால் ஏற்படும் பாதிப்பும் அதனால் எழும் பிரச்சனைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் குடிபோதைக்கு அடிமையானவர்களுடனும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டு அறிவுறுத்தல் பிரச்சாரம் செய்து மதுப்பழக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கையில் இறங்குவது என முடிவுகள் எடுக்கப்பட்டன.

யாழ். மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருள்திரு. S. J. இராஜநாயகம் அடிகளாரும், அமலதாஸ் அடிகளாரும், இரவிச்சந்திரன் அடிகளாரும் கலந்து கருத்துரை வழங்கினர்.

இவ் ஒன்றுகூடல் நிகழ்வினை புனித மரியாள் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரின் ஒத்துழைப்புடன் இயக்குனர் ஆனந்தக்குமார் அடிகளார் ஏற்பாடு செய்திருந்தார். யாழ் மனித முன்னேற்ற நடுநிலையத்தால் இந்நிகழ்வுக்குரிய நிதியுதவி வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

J. வோல்வின்

### யாழ்ப்பாணத்தில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த துன்பங்கள் மத்தியிலும் அவர்களுக்கு சற்று ஆதரவாகவும், இறைவனுடைய அருளாலும் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது போல் தெரிகின்றது. குளங்கள் நிறைந்திருப்பதும் இதற்கு நல்ல அறிகுறியாகும். ஆனால் விளைச்சலை நல்ல முறையில் சந்தைப்படுத்திப் பயன்பெற முடியுமோ தெரியாது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து அங்கிருப்பவர்கள் தமது வீடுகள் உறவினர்களையும் பற்றி கரிசனையுடன் கேட்டார்கள். திரும்பி வந்து வாழ்வை ஆரம்பிக்க நல்ல ஒரு நிலை உருவாகாதா? என்று அங்கலாய்ப்போடு இருக்கிறார்கள்.

குருக்களும், கன்னியர்களும் மற்றைய பணியாளர்களும் அர்ப்பணத்தோடும் ஆர்வத்தோடும் ஒன்றாக நின்று உழைப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இது மகிழ்ச்சி தரும் விடயமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### மரணத்தின்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ ......

கடைசி வரை எம்மோடு கூடவே வருவது, நமது நற்செயல்களும் நாம் வாழ்ந்த விதமும் தான்.

எனவே மரணத்தின் பின் மறு உலகிற்கான சம்பாவனையை பெற்றுக்கொள்ள இவ்வுலகில் வாழும் இக்கால கட்டத்திலே எம்மை தயார் செய்வோமா? எம் வாழ்வை மாற்றி அமைப்போமா?

## ஏழைகளுக்கும் அந்நியருக்கும் உன்வீட்டில் இடம்கொடு (இசை. 58:4 -7)

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1998ஆம் ஆண்டு பங்குனிமாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது P193